1995 மார்ச் 29]

ஆயிரம் மதிப்பீட்டிலே, மின் வாரியத்தினால் பணிகள் இன்றைக்குத் தொடங்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பணிகள் முடிவடைந்து, பிரச்சினைகள் எல்லாம் முழுவதுமாகக் களையப்படுகிற சாத்தியக்கூறுகள் இருக்கிற காரணத்தினால்தான், அப்பணிகளைத் தொடங்கி யிருக்கிறார்கள். அந்தப் பணிகள் முடிவடைந்த பிறகு, அங்கே நிச்சயமாகப் பிரச்சினைகள் இருக்காது. ஆகவே, அந்தப் பணிகள் முடிவடைந்து, முறையாகக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுவதற்கு அனைத்துப் பணிகளையும் அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு உறுதியிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 159, திரு. எஸ்.எஸ். ராமசுப்பு, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

159—

கல்லூத்து அருந்ததியர் குடியிருப்புக்கு மின்வசதி அளித்தல்

20663*—திரு எஸ்.எஸ். ராமசுப்பு:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், கல்லூத்து அருந்ததியர் குடியிருப்புக்கு மின்விளக்கு வசதி இல்லாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம், எனில், அதற்கு மின் விளக்கு அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், கல்லூத்து, அருந்ததியர் குடியிருப்புக்கு ஊராட்சி நிதியின் வாயிலாக தெரு விளக்குகள் தற்போது அமைக்கப்பட்டுள்ளன.

திரு. எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியை எழுப்பியதற்கு முக்கியமான காரணம் என்னவென்றால், அந்தப் பகுதியிலே வாழ்கிற அருந்ததிய சமுதாயத்தினர், அந்தக் காலனி வீடுகளுக்கு மின்சார விளக்கு இல்லாமல், ஒரு சகோதரிகூட, அங்கே பாம்பு கடிக்கப்பட்டு இறந்து போனார்.

நான் அங்கே சென்றிருந்தபோது, அங்கு அவர்களுக்கு மின்சார வசதி செய்து தரவேண்டுமென்று என்னிடத்தில் கேட்டிருந்தார்கள். இதுசம்பந்தமாக, அதிகாரிகளிடத்தில் நான் தெரிவித்திருந்தேன். இன்றைக்கு, அது போடப்பட்டிருக்கிறது என்று சொன்னதினால், உண்மையிலேயே மகிழ்ச்சி. அதே சமயத்தில், இப்போது நான் அங்கே கேட்டபோது, மின்சார விளக்குகள், தெருக்களில் எரியவில்லை என்று சொல்கிறார்கள். அதை நிவர்த்தி செய்து, மீண்டும் அந்தக் குறை இல்லாமல் செய்ய, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், உரியவர்களிடம் சொல்லி ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி ஒரு கேள்வியைப் போடுவார் என்றுதான், நேற்றிரவு பி.டி.ஓ. ஆபிஸுக்குத் தொடர்பு கொண்டு கேட்டபோது, அங்கே எரிகிறது என்ற தகவலை எனக்குத் தந்திருக்கிறார்கள். ஆகையினால், நிச்சயமாக அங்கே விளக்குகள் எரிகின்றன. சட்டமன்ற உறுப்பினர் அதனைப் பார்வையிடலாம். கல்லூத்து அருந்ததியினர் குடியிருப்பில், மொத்தம் இருக்கிற வீடுகள் 21. அவற்றில் மொத்தம் சுமார் 110 பேர் வாழ்ந்து வருகிறார்கள். அங்கு 3 தெரு விளக்குகள் இருக்கின்றன. அந்த 3 தெருவிளக்குகளும் நல்ல முறையில் இயங்கி வருகின்றன. குடிநீர் வசதிக்கு ஒரு கைபம்பு உள்ளது. அதில் இப்போதும் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. இக்கிராமத்திற்கு இணைப்புச் சாலை வசதி இருக்கிறது. ஒரு குடிலுக்கு ஒரு மின் விளக்கு திட்டத்தின்கீழ், மின் விளக்கு வசதி செய்துதர, அப்பகுதி பொது மக்களிடமிருந்து, கீழப்பாவூர் பி.டி.ஓ. அவர்கள் மூலம் மனுக்களைப் பெற்று, மின் வாரியத்திற்கு அனுப்பி, அவற்றின்மீது நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறோம்.

திரு. எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தெரு விளக்குக் கேட்டீர்கள், போட்டாகிவிட்டது; அது எரிகிறது என்று அமைச்சர் சொல்லிவிட்டார். முடிந்து விட்டது உங்கள் கேள்வி. வினா எண் 160 (குறுக்கீடு) நீங்கள் ஒரு கேள்வி கேட்டு முழுவதுமாக அது நிறைவேற்றப்பட்டு விட்டது என்று பதில் சொல்லியாகிவிட்டது.

திரு. எஸ்.எஸ். ராமசுப்பு: ஒரு கேள்விக்குப் பின், இன்னொரு கேள்வி கூடுதலாகக் கொடுக்க மாட்டீர்களா?

1995 மார்ச் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விக்காக அல்ல; நேரத்திற்காகத்தான் பார்க்கிறேன். சரி, திரு. ராமசுப்பு.

திரு. எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத் துறையின் வாயிலாக, இதுபோன்ற — அதாவது, என்னுடைய தொகுதியில் மட்டுமல்ல; பொதுவாக தமிழகம் முழுவதுமாக, ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலமாகவும், ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலமாகவும் — காலனி வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. அப்படிக் காலனி வீடுகள் கட்டிக் கொடுக்கும்போது, குடிநீர் வசதி செய்து கொடுக்கிறீர்கள். அதேசமயத்தில், மின்சார வசதியையும், காலனி வீடுகள் கட்டிக் கொடுக்கும்போதே, சேர்ந்தாற்போல செய்து கொடுத்து விடுவீர்களானால்— ஏனென்றால், சில ஊர்களில், ஓராண்டு இரண்டாண்டுகள், மூன்றாண்டுகள் என்று இன்னும் மின்வசதி செய்து கொடுக்கப்படாமல், அது சீனியாரிட்டிபடிதான் கொடுக்கப்படும் என்று சொல்கிறீர்கள் — அந்தப் பொதுமக்களுக்கு...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்குத் தனிக் கேள்விப் போடவும்.

அடுத்து, வினா எண் *160*, திரு. எம். ஆண்டி அம்பலம், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

160—

ஒகேனக்கல்லில் சுற்றுலாப் பயணிகளுக்குச் சிறப்புத் திட்டம்

**10631*—திரு. எம். ஆண்டி அம்பலம்:

மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் காவிரி இணையும் இடமான ஒகேனக்கல்லில் சுற்றுலாப் பயணிகள் தங்கவும் மற்றும் அவர்களுக்கான இதர வசதிகள் கிடைக்கவும் சிறப்புத் திட்டம் ஒன்றினை உருவாக்கிச் செயல்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,